**இராஜாங்கனை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இராஜாங்கனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இராஜாங்கனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 125,000 ஆக இருந்த போதும் அது ரூபா 249,500 ஆக விரிவான வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பதிவழித்தல்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்ற கடை வாடகை ரூபா 490,340 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக விரிவான வருமானக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் உள்ளவாறு உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த வேலையொன்றில் எந்தவொரு வேலையும் ஆரம்பிக்கப்படாதிருந்த போதும் | - மேற்படி - | வேலை ஆரம்பிக்கப்படாத வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோராக |

| | | |
|---|---|---|
| ரூபா 11,391,748 ஆன வேலை கடன்பட்டோர் மற்றும் வேலை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்ய முடியாது | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களின் பட்டோலைகளின் ஆரம்ப மீதிக்கும் பேரேட்டு கணக்கின் பிரகாரமான ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 2,213,779 வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,880,392 கூட்டுத் தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடுகள் மற்றும் உறுதிப்படுத்தல்களை வழங்குவதற்கு முடியாதுள்ளது. | பதிவேடுகளை நாளதுவரையாக்கி உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான செயற்படு நிலையில் உள்ள 04 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 12,036,604 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 15,691,980 ஆகும்.

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க வங்கியில் 03 நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டு முழுவதும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பண அளவு விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை நிலையான வைப்புக் கணக்கு அல்லது சேமிப்பு வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகைப் பணத்தை விளைவற்று வைத்துக் கொள்ளாமல் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாடகை<br>மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு இருந்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 4,815,473 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்<br>04 நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை அறிவித்தல் பதாகை வருமானம் ரூபா 100,225 தொகை மற்றும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 09 தொலைபேசி கோபுரங்களுக்குரிய 2021 ஆம் ஆண்டிற்கான 04 தொலைபேசி கம்பனிகளிலிருந்து ரூபா 33,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்படுகின்ற 18 வருட காலங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்ற பெறுமதி ரூபா 2,326,517 ஆன 05 கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பான தகவல்களை கண்டறிய முடியாமையால் ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற்று பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டரீதியான ஏற்பாடுகளின் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பலவருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற பிரதேச சபையிலிருந்து வெளியே இடமாற்றலாகிச் சென்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 115,772 கடன் மீதியை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் பெக்கோ லோடர் மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்கியதற்காக 142.6 இயந்திர மாணித்தியாலங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 116,200 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படுகின்ற போட்டோன் டிறக்டர், நீர் பவுசர், மின்பிறப்பாக்கி மற்றும் கெப் வண்டி என்பவற்றை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 53-5052 என்ற கெப் வண்டி 2021 சனவரி மாதத்தின் போது செயலிழந்தமையால் பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்ட போதிலும் பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு எடுத்து வருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக பழுதுபார்த்து சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராதிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 36 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் பெறுமதி ரூபா 7,000,000 ஆன 06 செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டங்களில் 05 உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்யப்படவில்லை. | அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்களுக் காக மாத்திரம் உடன்படிக்கை செய்தல் வேண்டும். |